# பத்திரிக்கை செய்தி

## லஞ்சம் வற்புறுத்தி கேட்டு பெற்ற செங்கல்பட்டு மாவட்ட சீவாடி ஊராட்சி மன்ற தலைவர் கைது

சென்னை சோழிங்கநல்லூர், புதிய குமரன் நகர், முதல் பிரதான சாலையில், எண்.5 என்ற முகவரியில் வசித்து வரும் K.நிகமத்துல்லா, த/பெ.K.கபூர் என்பவர் 26.07.2023ந்தேதி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3, கொடுத்த புகார் மனுவில், வாதி கடந்த 2010 முதல் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாகவும், பின்னர் கடந்த 2014 முதல் JEMS Foundation என்ற பெயரில் ரியல் எஸ்டேட் மற்றும் கட்டுமான பணிகளையும் செய்து வருவதாகவும், JEMS Foundation என்ற நிறுவனத்தின் பங்குதாரர்களாக அவரது மனைவி ஷகிலா மற்றும் மகன் அக்பர் ஆகியோர் இருந்ததாகவும், காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் தாலூகா, கூவத்தூர் பகுதியை சேர்ந்த திரு.கண்ணன் என்கிற கண்ணபிரான் என்பவருக்கு சொந்தமான தற்போதைய செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் தாலூகா, சீவாடி கிராமத்திற்கு உட்பட்ட சர்வே எண்.197/2ல் அடங்கிய 336 செண்ட்(3.36 ஏக்கர்) நிலத்தை, புதிய மனைகளாக உருவாக்கம் செய்து விற்பதற்கு, JEMS Foundation என்ற அவரது நிறுவனத்தின் பங்குதாரான அவரது மகன் திரு.அக்பர் என்பவரின் பெயரில் பொது அதிகாரம் பெற்றதாகவும், பொது அதிகாரம் (பவர் ஏஜெண்ட்) பெற்று, Royal City என்ற பெயரில் வீட்டு காலி மனைகளாகவும் மற்றும் வீடு கட்டியும் விற்பனை செய்ததாகவும், பின்னர் வாதி தனது மகன் அக்பரின் பணிச்சுமையை குறைக்கும் பொருட்டு, அவரது பெயரில் (விற்பனை செய்த இடங்களை தவிர) இருந்த மீதமுள்ள வீட்டு மனைகளை பொது அதிகார ரத்து ஆவணமாக சார்-பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து, வாதி அந்த Royal City என்ற பெயரில் உள்ள மீதமுள்ள வீட்டு மனைகளை விற்பதற்கும், வீடு கட்டி விற்பதற்கும், தனது பெயரில் பொது அதிகாரம் பெற்று, அதில் மனை எண்.140யில் 474 சதுர அடியிலும் மற்றும் மனை எண்.141யில் 601.94 சதுர அடியிலும் வீடு கட்டுவதற்கு, சீவாடி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களிடம் கட்டிட வரைபடம் அனுமதி பெறுவதற்கு கடந்த 25.05.2023ந்தேதி விண்ணப்பம் செய்து, அதனை தொடர்ந்து, கட்டிட வரைபட அனுமதி பெறுவதற்கு சீவாடி ஊராட்சி மன்ற தலைவர் திரு.அரங்கநாதன் 05.07.2023ந்தேதி சந்தித்து மனை எண்.140 மற்றும் 141க்கு வரைபட அனுமதி வழங்குமாறு வேண்டி கேட்டபோது, அதற்கு ஒரு மனைக்கு ரூ.15,000/ வீதம் இரண்டு மனைகளுக்கும் சேர்த்து ரூ.30,000/- கொடுத்தால்தான் மேற்சொன்ன மனை எண்களுக்கான கட்டிட வரைபடம் அனுமதி வழங்க முடியும் என கறாராக கூறியதாகவும், பின்னர் மீண்டும் 24.07.2023ந்தேதி சீவாடி ஊராட்சி மன்றத்தலைவர் திரு.அரங்கநாதன் அவரது செல்போன் எண்ணிலிருந்து வாதியின் செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டு, மனை எண்.140, 141க்கு கட்டிட வரைபடம் அனுமதி ரெடியாக உள்ளதாகவும், அவர் கேட்ட பணத்தை கொடுத்து விட்டு, மனைகளுக்கான வரைபடம் அனுமதி பெற்று கொள்ளுமாறு தெரிவித்ததாகவும், வாதிக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை என்றும், வாதி தனது மனைகளுக்கு வரைபடம் அனுமதி வழங்குவதற்கு ரூ.30000/-லஞ்சமாக கேட்கும் சீவாடி ஊராட்சி மன்ற தலைவர் திரு.அரங்கநாதன் மீது நடவடிக்கை எடுக்கும்படி தனது புகாரில் தெரிவித்துள்ளார். அதன்பேரில் சீவாடி ஊராட்சி மன்றத்தலைவர் திரு.அரங்கநாதன் என்பவருக்கு எதிராக 26.07.2023ந்தேதி குற்ற வழக்கு பதிவு செய்து, அதன் தொடர்ச்சியாக பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொண்டு, சீவாடி ஊராட்சி மன்றத்தலைவர் திரு.அரங்கநாதன் என்பவர் வாதியின் Royal City என்ற பெயரில் உள்ள மனைப்பிரிவில் புகார்தாரர் K.நிகமத்துல்லா என்பவரிடம் லஞ்சமாக ரூபாய் 30,000/- கேட்டு பெற்றபோது கையும் களவுமாக பிடித்து கைது செய்யப்பட்டார்.